01. தொழுவினில் மனுவாய் (வருகைப் பாடல்)

இயல்: முனைவர் கவி. சேவியர்

இசை, பாடியவர்: இர்வின் விக்டோரியா

இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

தொழுவினில் மனுவாய் பிறந்தவரை
தொழுதிட ஆலயம் நுழைந்திடுவோம்
தந்தையின் மைந்தர் அழைக்கின்றார்
கந்தையில் பிறந்தவர் அழைக்கின்றார்
வானவர் வரவினில் மகிழ்ந்திடுவோம்
பலியினில் நாமும் கலந்திடுவோம்

சரணம்

1. தொழுவினில் பிறந்திட்ட தேவமகன்
   ஒளியின் வழியாய் அழைக்கின்றார்
   தூரத்தில் தூங்கிடும் இடையரையும்
   தூதரின் மொழியில் அழைக்கின்றார்
   அழைத்திடும் அவர் குரல் கேட்டிடுவோம்
   அழைப்பினை மனதினில் ஏற்றிடுவோம்.
   பழியினை அழித்திடப் பிறந்தவரை
   தொழுதிட மனதினைத் திறந்திடுவோம்.

2. அன்னையின் மடியினில் தந்தைமகன்
   அன்பின் வேதம் படிக்கின்றார்
   விண்ணக விடியலாம் விந்தைமகன்
   மீட்பின் பாதை விரிக்கின்றார்
   மேய்ப்பனின் வழியினில் வாழ்ந்திடுவோம்
   கிடையினில் ஆடுகன் சேர்த்திடுவோம்
   வழியினைக் காட்டியே வாழ்ந்தவரின்
   நெறியினில் வாழ்வினை அமைத்திடுவோம்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com**
**(Christmas 2021)**